பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**10 09 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

**1.** சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு நிலையான விண்வெளி மண்டலத்தை இந்தியா ஆதரிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** நாட்டில் சிவில் விமான போக்குவரத்துத்துறை வளர்ச்சியடைந்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

**3.** தேர்தல் ஆணையத்திற்கும், வாக்காளர்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் விளங்குவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. **Gyanesh Kumar** தெரிவித்துள்ளார்.

**4.** சீனாவில் இன்று சரக்கு கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் **20**-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

**5.** வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **H S** பிரணாய், **Sanskar Saraswat** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>>>

சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு நிலையான விண்வெளி மண்டலத்தை இந்தியா ஆதரிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெற்ற சர்வதேச விண்வெளி உச்சிமாநாட்டில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், அறிவியல் கண்டுபிடிப்புகள் மக்களுக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும் என்று கூறினார்.

விண்வெளி ஆராய்ச்சியில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

வசுதெய்வ குடும்பகம் என்ற அடிப்படையில் ஒரே பூமி — ஒரே குடும்பம் — ஒரே எதிர்காலம் என்ற அடிப்படையில் முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சந்திரயான்-3 விண்கலம் மூலம் முதல் முறையாக நிலவின் தென் துருவத்தில் சென்ற நாடு என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளதாக அவர் கூறினார்.

சூரியன் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ள ஆதித்யா L-1 விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் சர்வதேச விண்வெளி மையத்தை அமைக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளதாக அவர் கூறினார்.

நாட்டின் விண்வெளிப் பயணத்தில் இஸ்ரோவின் பங்கு மிகவும் முக்கியமானது என்று பிரதமர் பாராட்டினார்.

விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் பேரிடர் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு செயற்கைக் கோள்கள் செலுத்தப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

நாட்டில் சிவில் விமான போக்குவரத்துத்துறை வளர்ச்சியடைந்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உலகளாவிய மாநாட்டில் உரையாற்றிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிவில் விமான போக்குவரத்துத்துறையில் பல்வேறு மாற்றங்களை கொண்டுவந்துள்ளதாக கூறினார்.

தற்போது, சாதாரண மக்களும் விமானங்களை பயன்படுத்தி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ், விமானங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

2035-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் விண்வெளி மற்றும் பாதுகாப்பு வர்த்தகம் 3 ஆயிரம் கோடி டாலர் அளவுக்கு அதிகரிக்கக்கூடும் என்றும் திரு ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<<>>>>>>>

நாட்டின் தொலைதூர பகுதிகளில் மின்சார இணைப்பு வழங்க சிறிய நீர்மின் நிலையங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை இணையமைச்சர் திரு ஸ்ரீபத் யசோ நாயக் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெறவுள்ள பாரத் புதுப்பிக்கத்தக்க உச்சிமாநாடு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிசக்தியை உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

நாட்டில் உள்ள 7 ஆயிரத்து 100 மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 5 புள்ளி இரண்டு கிகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இமாலயா பகுதியில் உள்ள மாநிலங்களில் சுற்றுச்சூழலை பாதிக்காத மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதாக திரு ஸ்ரீபத் யசோ நாயக் கூறினார்.

<<<<<>>>>>>>

தேர்தல் ஆணையத்திற்கும், வாக்காளர்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் விளங்குவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. **Gyanesh Kumar** தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம், அஹமதாபாத் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்த இளைஞர்கள் சிறப்பாக செயலாற்றி வருவதாக கூறினார்.

குஜராத் பல்கலைக் கழகத்தில் நாளை நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் **500** வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் அவர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

மேலும், ஆயிரம் தேர்தல் விழிப்புணர்வு குழும இளைஞர்களுடன் திரு. **Gyanesh Kumar** கலந்துரையாடவுள்ளார்.

<<<<<>>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் புதுதில்லியில் இன்று சர்வதேச சமூக சேவகர் **Prince Rahim Aga Khan**-வுடன் ஆலோசனை நடத்தினர்.

திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், **Agakhan** மேம்பாடு அமைப்பு இந்தியாவில் மேற்கொள்ளும் சமூக சேவை குறித்து அவருடன் விவாதித்ததாக கூறியுள்ளார்.

கல்வி, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்த அமைப்பு இந்தியாவில் மேற்கொள்ள உள்ள திட்டங்கள் குறித்தும் ஆலோசித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், **Agakhan** மேம்பாட்டு அமைப்பு இந்தியாவில் சுகாதாரம், வேளாண், ஊரக வளர்ச்சி, மகளிர் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சமூக சேவை செய்வது குறித்து ஆலோசித்தாக தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>>

**18** வயதுக்குட்பட்டோர் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதில் பாதுகாப்பு அம்சங்கள் ஏற்படுத்துவது குறித்த மனு மீது விசாரிக்க உச்சநீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த், நீதிபதிகள் திரு. **Joymalya Bagchi,** திருமதி. **V. Mohana** ஆகியோர் அடங்கிய அமர்வு, இதுதொடர்பாக மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

சில சமூக ஊடகங்களில் **13** வயதிலிருந்தே இணைய அனுமதி அளிக்கப்படுவது இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், ஆபாச வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

ஒடிசாவில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மயூர்பஞ்ச், பாலேஷ்வர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் தொடர் கனமழை பெய்து வருகிறது.

கட்டாக், கேந்திரபாடா உள்ளிட்ட **13** மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மாநில நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

<<<<<>>>>>>>

பீகாரில் தொடர் கனமழை காரணமாக, பாட்னா, வைஷாலி உள்ளிட்ட 14 மாவட்டங்களை சேர்ந்த 40 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு உணவு மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மழை வெள்ளத்தால் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

700-க்கும் மேற்பட்ட கிராம சாலைகள் நீரில் மூழ்கியுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களில் பள்ளிகளை திறக்க நடவடிக்கை எடுத்து வருவதாக பீகார் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

Kosi ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், Baltara-வில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் மை பாரத் கேந்திரா சார்பில், வளர்ச்சியடைந்த இந்தியா இளம் தலைவர்கள் உரையாடல் போட்டி நடத்தப்படுகிறது.

நெல்லை மாவட்டத்தை சேர்ந்த தகுதியான இளைஞர்கள் இதில் பங்கேற்க வேண்டும் என்று மாவட்ட மை பாரத் ஒருங்கிணைப்பாளர் திரு ஞானசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

***(Sound Byte — ஞானசேகரன் — 40 Sec. )***

<<<<<>>>>>>>

சீன அதிபர் திரு **Xi Jinping** பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்க இந்தியா வரவுள்ளார்.

புதுதில்லியில் நாளை மறுநாள் தொடங்கி, **13**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள **18**-ஆவது பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்க பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று அவர் வரவுள்ளதாக சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேற்காசியா பிரச்சினை, ரஷ்யா-யுக்ரைன் போர் உள்ளிட்ட பல்வேறு உலகளாவிய பிரச்சினைகளின்போதும் இந்த உச்சிமாநாடு முக்கியத்துவம் பெறுகிறது.

சீன அதிபரின் இந்திய பயணத்திற்கு முன்னோடியாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் **Wang Yi**, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவலுடன் பெய்ஜிங்கில் ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<<>>>>>>>

சீனாவில் இன்று சரக்கு கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் **20**-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

**Qingdao** துறைமுகத்துக்கு அருகே இந்த தீ விபத்து ஏற்பட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்த விபத்து தொடர்பாக, விசாரணைக்கு சீன அதிபர் திரு **Xi Jinping** உத்தரவிட்டுள்ளார்.

இந்த விபத்தில் சிக்கியவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>>

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய், **Sanskar Saraswat**, ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் பிரணாய், **21-15, 13-21, 21-14** என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் **Wu Zhe Yang**-ஐ வென்றார்.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் **Sanskar Saraswat 21-12, 10-21, 21-18** என்ற செட் கணக்கில் சக நாட்டு வீரர் ஜார்ஜை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Tanvi Sharma, Isha Rani Baruva, Malvika Bansod, Rakshitha Sree** உள்ளிட்டோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

துலீப் கிரிக்கெட் கோப்பையை கிழக்கு மண்டல அணி வென்றுள்ளது.

சென்னையில் நடைபெற்ற கிழக்கு மண்டம் — தெற்கு மண்டலம் அணிகளுக்கு இடையேயான இறுதிப்போட்டி டிராவில் முடிவடைந்தது.

முதல் இன்னிங்சில் பெற்ற கூடுதல் ரன் அடிப்படையில் கிழக்கு மண்டல அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

--------

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு **8** மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<END>>>>>>>**